ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2280/27 - 2022 මැයි මස 18 වැනි බදාදා - 2022.05.18

2280/27 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 3/2/10/269/B.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/12/2018/WS/374.

கம்கஹா அத்தனகல்லை மினுவங்கொடை ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் குலுமங் நீர் பம்பிக் கூடத்தை நிர்மாணிக்கும் பொருட்டு கீழ் குறிப்பிடப் படும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அத்தனகல்லை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 365C கரஸ்னாகலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கரஸ்னாகலை என்ற ஊரில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் சார்பாக கம்பஹா சிரேஸ்ட நில அளவை அத்தியட் சகரால் தயாரிக்கப்பட்ட 2022.03.14 ஆந் திகதியுடைய ஆரம்ப காணி பிரித்தெடுப்பு இல. கம் 4276 இல் காட்டப்பட்டுள்ள முழுப் பரப்பளவில் 0.3335 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழே குறிப்பிடப் படும் 5 காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**காணித்துண்டு இல. 01**

காணியின் பெயர்: தம்முலஹேன, பலுதங் கொல்லகெலே; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு, காணி சீர்திருத்த ஆணைக்குழு. காணி எடுத்தல் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்காக; விஸ்தீரணம்: 0.0497 ஹெக்டயார்.

**காணித்துண்டு இல. 02**

காணியின் பெயர்: தம்முலஹேன, பலுதங் கொல்லகெலே; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: வேயங்கொடை - அளவளை கரஸ்னாகலையைச் சேர்ந்த ராஜபக்ஷ முதியன்சேலாகே பியசேன



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

என்பவர் வதிவிட உரிமை கோருகிறார். நீர் ஓடையால் வேறாக்கப்பட்ட நிலம் பஸ்னாகொடை நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கத் தேவைப்படுகிறது; விஸ்தீரணம்: 0.0369 ஹெக்டயார்.

**காணித்துண்டு இல. 03**

காணியின் பெயர்: தம்முலஹேன, பலுதங் கொல்லகெலே; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: வேயங்கொடை - அளவளை கரஸ்னாகலையைச் சேர்ந்த ராஜபக்ஷ முதியன்சேலாகே பியசேன என்பவர் வதிவிட உரிமை கோருகிறார். இது மயானம் ஒன்றுக்கு ஒதுக்கப்பட்ட நிலம். இது பஸ்னாகொடை நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கத் தேவைப்படுகிறது; விஸ்தீரணம்: 0.0583 ஹெக்டயார்.

**காணித்துண்டு இல. 04**

காணியின் பெயர்: தம்முலஹேன, பலுதங் கொல்லகெலே; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: வேயங்கொடை - அளவளை கரஸ்னாகலையைச் சேர்ந்த ராஜபக்ஷ முதியன்சேலாகே பியசேன என்பவர் வதிவிட உரிமை கோருகிறார். இது மயானம் ஒன்றுக்கு ஒதுக்கப்பட்ட நிலம். இது பஸ்னாகொடை நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கத் தேவைப்படுகிறது; விஸ்தீரணம்: 0.1539 ஹெக்டயார்.

**காணித்துண்டு இல. 05**

காணியின் பெயர்: தம்முலஹேன, பலுதங் கொல்லகெலே; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: வேயங்கொடை - அளவளை கரஸ்னாகலையைச் சேர்ந்த ராஜபக்ஷ முதியன்சேலாகே பியசேன என்பவர் வதிவிட உரிமை கோருகிறார்; விஸ்தீரணம்: 0.0347 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அத்தனகல்லை பிரதேச செயலகத்தில் என் முன் தோன்றும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப் பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக் கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். பி. குணவர்தன,
பிரதேச செயலாளர்/காணி எடுத்தல் அதிகாரி,
அத்தனகல்லை.

பிரதேச செயலகம்,
அத்தனகல்லை,
2022, ஏப்பிறல் 18.

EOG 05 - 0085